JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **84/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 8** | Prosecution /Defence / Court | |
| Name | துரைராஜ் | Village | கருக்கம்பாளையம் |
| Father's Name | சுப்பிரமணி | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 10.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு நான் தென்னை மரம் ஏறி தேங்காய் வெட்டும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். தேதி வருடம் எதுவும் சரியாக ஞாபகம் இல்லை. ஒரு நாள் என்னுடைய வீட்டில் இருந்த வந்து கொண்டிருக்கும் போது எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களும், சோமுக் கவுண்டரும் மதியம் சுமார் 12.00 மணியளவில் நின்று கொண்டிருந்தார்கள், சோமுக் கவுண்டர் என்னை அழைத்து 2 கையெழுத்துக்களை போடுமாறு சொன்னார். ஒரு சிறிய பிரச்சனை தான் கையெழுத்து போடுங்கள் அவரும் கையெழுத்து செய்திருப்பதாகவும், அதனால் நானும் கையெழுத்துக்களை போட்டேன். என்னை கையெழுத்து போடச் சொன்ன சோமுக் கவுண்டரும் இறந்து விட்டார். மற்றபடி எனக்கு வழக்கு விவரங்கள் பற்றி தெரியாது. **பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. 8 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு**

**விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

கடந்த 10.01.2014 ம் தேதி காலை 6.00 மணிக்கு நானும், சூர்யா பேக்கரி டீ மாஸ்டர் ரங்கராஜனும் பிச்சாண்டாம்பாளையம் மாரியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட சென்ற போது பெருந்துறை உதவி ஆய்வாளர் அவர்கள் வந்திருந்தவர் என்னையும் ரங்கராஜனையும் அழைத்து வழக்கு சம்பந்தமாக சம்பவம் நடந்த இடத்தை பார்க்க வந்திருப்பாகவும் சம்பவ இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் எங்கள் முன்னிலையில் தயார் செய்தார் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் நான் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்தது மட்டும் தெரியும். 10.01.2014 ம் தேதி காலை 8.00 மணிக்கு ஈரோடு அரசு மருத்துவமனையில் FS III வது வார்டில் உள்நோயாளியாக இருக்கும் லதா என்பவர் கிழிந்த நைட்டியை ஆஜர் படுத்தியதை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்த போது வாக்குமூலமாக பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்த விவரங்களை கூறியதோடு ரங்கராஜன் என்பவரும் தன்னுடன் இரண்டாவதாக மேற்படி 2 ஆவணங்களிலும் கையொப்பம் செய்ததை கூறிவிட்டு தற்போது வழக்கைப்பற்றி தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை